Arimaa Nokku Journal ISSN: 2320-4842
(UGC Care Group-I Journal) Vol-18 No. 04 October–December 2024

# தமிழ்ப் புதினங்களில் காலனியப் பிரதிபலிப்பு

நெறியாளர்
***முனைவர் இரா.அந்தோணி ராஜ்,***
உதவிப்பேராசிரியர். தமிழ்த்துறை,
வீரமாமுனிவர் உயராய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை-627 002.
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி-12.

***மு.வேலம்மாள்,***
பதிவெண்: 21111284022027,
முழுநேர முனைவர்ப்பட்ட ஆய்வாளர்,
இணைவு: மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்,
அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி-12.
தமிழ்த்துறை,
வீரமாமுனிவர் உயராய்வு மையம்,
தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரி,
பாளையங்கோட்டை-627 002.

## ஆய்வுச் சுருக்கம்

தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு வகையான கோட்பாடுகள் வெளியாகி உள்ளது. அதில் காலனியமும் அதைக் குறித்த கோட்பாடுகளும் ஒரு முக்கியமான தளத்தைப் பெற்றுள்ளது. இருப்பினும் இருபதுகளுக்குப் பிறகு தோன்றிய காலனியக் கோட்பாடுகளைக் குறித்து இன்றும் பல்வேறு ஆய்வுகள் தோன்றவில்லை. ஆய்வுத் தளத்திலும் காலனியக் கோட்பாட்டைக் குறித்த புரிதலும் சற்றுக் குறைவாகவே உள்ளது. எனவே காலனியக் கோட்பாடுகள் தமிழ்ப் புதினங்களில் எப்படிப் பிரதிபலித்துள்ளது என்பதைக் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது. தொடக்கக்காலத் தமிழ்ப் புதினங்கள் தோன்றிய காலனியச் சூழலும், துப்பறியும் புதினங்களில் இடம்பெற்றுள்ள காலனியக் கூறுகளும், இவற்றிற்குப் பின்பான அண்மைக்கால நாவல்களில் கூறப்பட்டுள்ள காலனியச் செய்திகளும் இக்கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளன.

## முன்னுரை

இருபத்தோராம் நூற்றாண்டில் பன்முகமான எடுத்துரைப்பு வடிவங்களைக் கொண்டு நாவல்களம் புதிய திசைகளுக்கு நகர்ந்து கொண்டிருக்கிறதென்றால் அது மிகையல்ல. நாவல்கள் வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்களையும் விளக்கும் ஆற்றல் பெற்றதாகத் திகழ்கிறது. ஆங்கிலேயரின் வருகைக்குப் பின்னராக நிகழ்ந்த அறிவியல் மாற்றங்கள், அச்சுப்பண்பாடு, புதிய போக்குவரத்து, தொழிற்சாலைகளின் பரவல் போன்ற நவீனக் கூறுகளால் பத்தொன்பதின் பிற்பகுதியில் புத்திலக்கியங்கள் உருவாகத் தொடங்கின. மத்திய தர வர்க்கத்திடம் புத்தகம் வாசிப்பு போன்ற வளர்ச்சியைப் பின்புலமாகக் கொண்டே மாயூரம் வேதநாயகம்பிள்ளை தமிழில் முதல் புதினமான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதினார். அவரைத் தொடர்ந்து பல புதினங்கள் படைக்கப்பட்டன.

## தொடக்கக்கால தமிழ்ப் புதினங்கள்

தமிழர்களுக்கென்றே கதைக்கூறும் மரபும் வாய்மொழி மரபும், வடிவமும் இருந்தது. முன்னெடுக்கும் ஆளுகையையும், கதையையும் கொண்டு இவை சிறப்பாக அமையும். ஆரம்ப காலகட்டத்தில் பாரதியின் படைப்புகளில் நாட்டுப்புற சிந்து வடிவங்கள் போன்றவற்றைக் கொண்டு பாரதி இலக்கியம் அமையப் பெற்றதைப் போல பின்பு தோன்றிய படைப்புக்கள் அவ்வாறு அமையவில்லை.

வேதநாயகம்பிள்ளை மரபு மீட்பு செய்திருந்தாலும், ராஜம் ஐயர் போன்றோர் தம் கதைகளில் வட்டாரத்தன்மை போன்றவற்றை முதன்மைப்படுத்தியிருந்தாலும், ஐரோப்பிய கதை சொல்லும் முறையில்தான் புதினங்களை அமைத்தார்கள். புதினங்கள் நம் தமிழ் மரபை விடுத்து மேற்கை பிரதிபலிக்கக் காலனியச் சூழலில் உருவான தொடக்கக்கால நாவல்களே காரணம் எனலாம்.

## துப்பறியும் புதினமும் காலனியமும்

> **"சாதி மத அடையாளங்கள் மேட்டிமைத்திரளை மையமிட்டு மறுகட்டமைப்பு செய்வது ஒருபுறமென்றால் மறுபுறம் மேற்கைப் போலச் செய்து கோட் அணிந்த கனவான்களைத் துப்பறியும் நாவல்கள் உற்பத்தி செய்யத் தொடங்கின."[1]**

ஆரணி குப்புசாதி முதலியார், வடுவூர் துரைசாமி ஐயங்கார், ரங்கராஜ் போன்றோர்களின் படைப்புகள் இதற்குச் சாட்சியாக அமைகிறது. இத்தகையப் புதினங்கள் மக்களை வெகுவாகக் கவர்ந்தன. துப்பறியும் புதினங்களில் ஆங்கிலேயரின் ஆடை, குடும்ப அமைப்பு, உடல்மொழி போன்ற பண்புகள் மீண்டும் மீண்டும் பதிவு செய்யப்பட்டன. ஆங்கிலேயர்களின் வாழ்க்கையைப் போலச் செய்வது அதைப் போன்றே தன் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்துக் கொள்வது போன்ற செயல்களின் மூலம் மேற்கைச் சுமந்து செல்லும் கற்பனை சமூகமாகத் தன்னை மாற்றிக் கொள்ள விரும்பும் மனிதர்களை உருவாக்கியது துப்பறியும் புதினங்கள்.

## நவீனத்துவ நாவல்கள்

துப்பறியும் நாவல்களைத் தொடர்ந்து நவீனத்துவ நாவல்கள் எழுதப்பட்டன. இந்நாவல்கள் சுதந்திரத்திற்கு முன்னும், பின்னும் இங்கு தோன்றிய நவீனத்துவச் சூழல்களைத் தழுவி எழுதப்பட்டவை. இந்நாவல்களையே காலனியத்தின் உச்சம் எனலாம். புதுமைப்பித்தன் தொடங்கி சுந்தரராமசாமி, அசோகமித்திரன், நகுலன் என நவீனத்துவ நாவல் எழுத்தாளர் பலர். இனக்குழுக்களுக்குரிய மொழி, பண்பாடு, கூட்டுணர்வு வாழ்வியல் போன்ற தனித்துவங்கள் நிராகரிக்கப்பட்டது.

> **"ஐரோப்பிய பாணியிலான தனிமனித கழிவிரக்கங்களை சுயவாதைகளை எழுதும் முறையை மேற்கிலிருந்து அப்படியே பின்பற்றினர்."[2]**

மேலும் நவீனத்துவ நாவல்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இனக்குழு மக்கள் பயன்படுத்தி வந்த கதை அமைப்பு மற்றும் மேற்கின் கலை மரபு உயர்ந்தது என்ற எண்ணத்தை இத்தகைய நாவல்கள் ஏற்படுத்தின.

## காலனியமும் காந்திய நாவல்களும்

காலனியம் தந்த நாவல் வடிவத்தைக் கொண்டே காலனியச் சட்டங்களை எதிர்த்து, மக்களை ஒன்று திரட்ட நாவல்கள் எழுதப்பட்டன. நீதியை ஒழுக்கத்தை வலியுறுத்தி தொடக்கக்கால நாவல்கள் உருவானது போல் சுதந்திரக் காலகட்டத்தில் தேசபக்தி, சுதேசியம், வெள்ளையர் எதிர்ப்பு, மது ஒழிப்பு போன்ற கருத்துருவாக்கங்களைக் கொண்டு நாவல்கள் உருவாயின. குறிப்பாக சுதந்திரதாகம் போன்ற நாவல்களைச் சொல்ல முடியும். இந்நாவல்கள் ஆடைகள், பேச்சு வழக்கு, உணவு, பண்பாடு, உடல் மொழி போன்றவற்றில் காலனிய ஓர்மைகளைக் கலைக்க முற்பட்டன.

> **“வெள்ளையரை மறுக்கும் இலச்சியம் நாவலுக்குள் வளர வளர தேசிய மனிதன் என்பவன் கட்டமைக்கப்பட்டு பிராந்தியத் தன்மையற்றவனாக அவன் கதைகளுக்குள் உருவாகத் தொடங்கினான்.”[3]**

## அண்மைக்கால நாவல்கள்

இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ் நாவல் போக்குகளைத் தொடர்ந்து கவனிப்பவர்களுக்குக் காலனியத்தின் அழிவுகளை மையப்படுத்தி நாவல்கள் தொடர்ந்து வந்ததைக் கவனிக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக ஜெயமோகனின் வெள்ளை யானை, டேனியலின் எரியும் பனிக்காடு, சு.வெங்கடேசனின் காவல் கோட்டம், சண்முகத்தின் சயாம் மரண ரயில் போன்ற புதினங்கள் காலனியத்தால் ஏற்பட்ட சுரண்டல்களையும் சீரழிவுகளையும் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன.

தேயிலைத் தோட்ட நிர்மாணங்களில் கொத்தடிமையாகி நசிந்த ஆயிரக்கணக்கான தொழிலாளிகளின் வரலாற்றை எரியும் பனிக்காடு புதினம் பதிவு செய்கிறது. கடும் உழைப்புச் சுரண்டல்கள், விஷக்கடிகள், தேயிலைப் புதர்களில் குழந்தைகளின் நசிவுகள், போதிய ஊதியமின்மை, அடிப்படை வசதியின்மை, கங்காணிகளின் காட்டுமிராண்டித்தனம் போன்றவற்றை கருப்பன், வள்ளி என்ற இரண்டு மாந்தர்களை வைத்து ஐம்பதிற்கும் மேற்பட்ட துயரச் சம்பவங்களை யதார்த்தமாகப் பதிவு செய்துள்ளார். எடுத்துக்காட்டாக,

> **“மருத்துவமனை என்று அழைக்கப்பட்டாலும் மாட்டுத் தொழுவத்தைப் போல்தானிருந்தது. அந்தக் கட்டிடத்திற்குத் தளம் போடவே இல்லை. துருப்பிடித்த இரும்பு சீட்டுகளைக் கொண்டு தாழ்வானக் கூரை வேயப்பட்டிருந்தது.”[4]**

இப்படியாக அங்கு வாழும் தொழிலாளர்களை வேலை வாங்க மட்டும் பயன்படுத்தினர். வாழ்வதற்கான எந்தச் சூழ்நிலையும் இல்லாத மக்களைக் குறித்து எரியும் பனிக்காடு புதினம் பதிவு செய்துள்ளது.

ஆங்கில அதிகாரிகள் அடித்தள மக்களுக்குக் கொடுத்த புதிய உரிமைகளும் அவர்கள் மீது நிகழ்த்திய வன்முறைகளுமே ஜெயமோகனின் வெள்ளை யானை. மதராசபட்டினம் என அழைக்கப் பெற்ற தற்போதைய சென்னை வெள்ளையர் ஆட்சியின் போது கறுப்பர் நகரம், வெள்ளை நகரம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டதும் பிரிக்கப்பட்ட கறுப்பர் நகரத்தின் மறைக்கப்பட்ட வரலாற்றை வெள்ளை யானை புதினம் சித்திரிக்கிறது.

> **“1878-இல் சென்னை ஐஸ்ஹவுஸ் தொழிற்சாலையில் தலித்துகள் பட்ட துயரங்கள் ஒரு பகுதியென்றால் தாது வருட பஞ்சம் அடித்தள மக்களைச் சிதைவுக்குள்ளாக்கியது இன்னொரு பகுதி”[5]**

மேலும் ஆங்கில அகராதிகள், உயர்சாதி தொழிலதிபர்கள் இடைநிலை சாதி கங்காணிகள் இணைந்து இந்தியாவில் முதல் முறையாகப் பறையர்கள் நடத்திய தொழிற்சங்கப் போராட்டத்தை வீழ்த்திய கதை நாவலின் பிரதானமாகும்.

மேலே குறிப்பிட்டது போக, மேலும் சில நாவல்கள் காலனியத்தையும் அது ஏற்படுத்திய விளைவுகளையும் விசாரணைக்குள்ளாக்கியது.

## முடிவுரை

காலனியத்தைக் குறித்தும் அவை தமிழ் இலக்கியத் தளத்தில், குறிப்பாகப் புதினங்களில் ஏற்படுத்திய விளைவுகளையும் காலனியத்தால் ஏற்பட்ட ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளையும், இவ்வாய்வுக் கட்டுரை பிரதிபலிக்கிறது. மேலும் இவை புதினத்தில் தன்னை எப்படிப் பிரதிபலிக்கிறது என்பதையும் அடித்தள மக்களின் வாழ்வில் காலனியம் ஏற்படுத்திய மாற்றங்களையும் இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகிறது.

## அடிக்குறிப்புகள்

1. ந.இரத்தினக்குமார், பின்காலனியம், ப.எண். 120.
2. மேலது., ப.168.
3. சு.பஞ்சாங்கம், இலக்கியத் திறனாய்வும் கோட்பாடுகளும், ப.262.
4. பி.எச்.டேனியல், தமிழில் இரா.முருகவேள், எரியும் பனிக்காடு, ப.65.
5. ஜெயமோகன், வெள்ளை யானை, ப.111.

## துணைநூற்பட்டியல்

1. **ந.இரத்தினக்குமார், - பின் காலனியம்,**
பாவை பப்ளிகேஷன்ஸ்,
சென்னை-600014.
முதல் பதிப்பு-2017.

2. **சு.பஞ்சாங்கம், - இலக்கியத் திறனாய்வும் கோட்பாடுகளும்,**
காவ்யா வெளியீடு,
சென்னை-5.
முதல் பதிப்பு-2010.

3. **பி.எச்.டேனியல், - எரியும் பனிக்காடு,**
**தமிழில் இரா.முருகவேள்,** விடியல் பதிப்பகம்,
கோயம்புத்தூர்-641015.
முதல் பதிப்பு-2007.

4. **ஜெயமோகன், - வெள்ளை யானை,**
வம்சி வெளியீடு,
சென்னை-600 077.
முதல் பதிப்பு-2021.